| | | | |
|---|---|---|---|
| Headline | MyKasih Plan forms at SMK Vivekananda, Brickfields | | |
| MediaTitle | Tamil Nesan | | |
| Date | 31 Mar 2015 | Color | Black/white |
| Section | News | Circulation | 35,000 |
| Page No | 15 | Readership | 125,000 |
| Language | Tamil | ArticleSize | 979 cm² |
| Journalist | NULL | AdValue | RM 2,373 |
| Frequency | Daily | PR Value | RM 7,120 |



# ரோட்டரி டிஸ்டிரிக் 3300 ஏற்பாட்டில் பிரிக்பீல்ட்ஸ் விவேகாநந்தா தமிழ்ப்பள்ளியில் "மை காசே" திட்டம் தொடக்கம்

(செய்தி: ந.சத்தியராஜா)
பிரிக்பீல்ட்ஸ், மார்ச் 31-

மக்கள் சமூகநல சேவைகளில் ஈடுபட்டுவரும் ரோட்டரி கிளப்புகள் தற்போது வசதி குறைந்த மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் முனைப்பு காட்டி வருகின்றன.

அவ்வகையில் நேற்று பிற்பகல் மணி 12.30 அளவில் ரோட்டரி டிஸ்டிரிக் 3300 ஏற்பாட்டில் பிரிக்பீல்ட்ஸ் விவேகாநந்தா தமிழ்ப்பள்ளியில் "மை காசே" அதிகாரப்பூர்வமாக தொடக்கி வைக்கப்பட்டது. இதன்வாயிலாக, இப்பள்ளியில் பயிலும் வசதி குறைந்த சுமார் 50 மாணவர்கள் இத்திட்டத்தின் கீழ் பயனடையவிருக்கின்றனர்.




மை காசே அறவாரியத் தலைவர் டான்ஸ்ரீ டாக்டர் இங்காய் பூன் கியாட்டிடம் ரிம 250,000 வெள்ளிக்கான நிதியை டி.ஜி.கிரண்ஜீட் கவுர் வழங்குகிறார்.

இது குறித்து, ரோட்டரி டிஸ்டிரிக் 3300 கவர்னர் டி.ஜி.கிரண்ஜீட் கவுர் கூறுகையில், உலகம் முழுவதிலும் உள்ள நாடுகளில் மக்கள் நல சேவைகளில் ரோட்டரி கிளப்புகள் ஈடுபட்டு வருகின்றன.

அதேபோன்று இந்நாட்டிலும் வட்டார அடிப்படையில் ரோட்டரி கிளப்புகள் சேவையாற்றி வருகின்றன. தற்போது வசதி குறைந்த மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் முனைப்பு காட்டி வரும் ரோட்டரிகள் அம்மாணவர்களுக்காக இவ்வாண்டு தொடக்கத்தில் "மை காசே" திட்டத்தை அமல்படுத்தி வருகின்றது.

இதன் மூலம் 15 ஆரம்ப மற்றும் இடைநிலைப்பள்ளி களிலிருந்து 771 மாணவர்கள் பயனடையவுள்ளனர்.

தொடக்கமாக, இத்திட்டம் மாணவர்களின் சத்துணவு வாயிலாக தொடங்கப்பட்டுள்ளது. அதாவது, இத்திட்டத்தின் கீழ் அங்கத்துவ அட்டை வழங்கப்பட்ட மாணவர்களின் கணக்கில் மாதா மாதம் 60.00 வெள்ளி வழங்கப்படும். சம்பந்தப்பட்ட மாணவர்கள் தங்களின் பள்ளிகளில் உள்ள சிற்றுண்டி சாலைகளில் அட்டையைக் காண்பித்து உணவை வாங்கிக் கொள்ளலாம்.

தற்போது, வசதிகுறைந்த மாணவர்களுக்கு சத்துணவு வழங்குவதற்கு இத்திட்டம் தொடங்கப்பட்டாலும் எதிர்வரும் காலங்களில் மாணவர்கள் பள்ளி உபகரணப் பொருட்களை வாங்க உதவுதல், டியூஷன் வகுப்புகளுக்கான கட்டணத்தைச் செலுத்துதல் முதலானவைக்கும் உதவிகள் வழங்கப்படும் என டி.ஜி.கிரண்ஜீட் கவுர் கூறினார்.

இத்திட்டத்திற்கு ஆதரவளிக்கும் வகையில் மை காசே அறவாரியத்திற்கு 250,000 வெள்ளி நிதியை ரோட்டரி டிஸ்டிரிக் 3300 சார்பில் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் விவேகாநந்தா தமிழ்ப்பள்ளியின் தலைமையாசிரியை தமிழ்ச்செல்வி, பங்சார் ரோட்டரி கிளப்பின் தலைவர் ஏன்னி தியோ, மை காசே அறவாரியத்தின் தலைவர் டான்ஸ்ரீ டாக்டர் இங்காய் பூன் கியாட், பள்ளி மாணவர்கள் முதலானோர் கலந்து கொண்டனர்.






மை காசே திட்டத்தின் அட்டையைப் பெற்ற மாணவர்களுடன் டான்ஸ்ரீ டாக்டர் இங்காய் பூன் கியாட், டி.ஜி.கிரண்ஜீட் கவுர், ஏன்னி தியோ, தமிழ்ச்செல்வி முதலானோர் உள்ளனர்.